மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர்கள் பாவம் செய்ததாக யாரும் சொல்லவில்லை. ஆகவேதான் இதை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

* 34 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Tamil Nadu Graduate Teachers' Association has made a representation to the Government, to sanction one post of Assistant Head-master for each Government High School in the State ; and

(*b*) if so, the action taken thereon ?

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளி ஒவ்வொன்றிலும் ஓர் உதவித் தலைமையாசிரியர் பதவியை ஏற்படுத்த அனுமதி வழங்குமாறு கோரி தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், அரசிடம் முறையிட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ் : பொதுவாக ஆயிரம் மாணவர்களுக்கு மேல் ஒரு பள்ளியில் இருந்தால், அப்பள்ளிக்கு ஒரு உதவித் தலைமையாசிரியரை வழங்கலாம் என்று இருக்கிறது. ஆகவே தனியார் பள்ளியாக இருந்தாலும், அரசுப் பள்ளியாக இருந்தாலும், இவ்வாறு ஆயிரம் மாணவர்களுக்கு மேல் உள்ள பள்ளிகளில் ஒரு உதவித் தலைமையாசிரியர் பதவியை ஏற்படுத்த அரசு முன்வருமா ? மேலும் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள மேல் நிலைப் பள்ளிகளிலும் வேலைப் பளு அதிகமாக இருப்பதால், மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ஒரு உதவித் தலைமையாசிரியர் பதவியை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதை அரசு தனியாகப் பரிசிலிக்கிறது.

1978 செப்டம்பர் 7]

திரு. க. மீனாட்சிசுந்தரம் : உயர்நிலைப் பள்ளிகளில் உதவித் தலைமையாசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை அரசு பரிசீலிப்பதாக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதே போன்று நடுநிலைப் பள்ளிகளிலும் கூடுதல் அல்லது உதவித் தலைமை ஆசிரியர்களை நியமித்து அதில் ஏழு ஆண்டுகாலமாக உள்ள சிக்கலைத் தீர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். இது நீண்டகாலமாக வழக்கு மன்றத்தில் இருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துக் தருகிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் : ஆயிரம் மாணவர்களுக்கு மேல் இருக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளிகளில் தற்போது சில தனியார் பள்ளி நிர்வாகம் உதவித் தலைமையாசிரியரை நியமித்திருக்கிறது. அரசுப் பள்ளிகளில் உதவித் தலைமையாசிரியர்கள் நியமிக்கப்படாமல் இருக்கிறது. விளக்கங்கள் தரும்போது, மேல்நிலைப் பள்ளிகளில் உதவித் தலைமையாசிரியர்கள் இருப்பார்கள் என்று சொல்லப்பட்டது. மேல்நிலைப் பள்ளி அமைக்கப்பட்டிருப்பதால், இப்போது வேலைப் பளு மிகுதியாக இருப்பதால், காலம் தாழ்த்தாமல் உதவித் தலைமையாசிரியர்களை நியமிக்க அரசு முன்வருமா? மேலும் ஆயிரம் பேர்களுக்கு மேல் உள்ள நடுநிலைப் பள்ளிகளிலும் உதவித் தலைமை ஆசிரியரை நியமிக்க அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பரிசீலனை முடிந்தவுடன் நிச்சயமாக ஆணை பிறப்பிக்கப்படும். மேல்நிலைப் பள்ளி நிர்வாகத்திற்கு உதவித் தலைமையாசிரியர்கள் தேவை என்பதை நாங்கள் உணர்ந்துதான் இதற்கு முன்னாலேயே அதை இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறோம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இப்போது சில பள்ளிகளில் துணைத் தலைமையாசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி நியமிக்கப்பட்ட பள்ளிகளில் கூட அவர்களுக்கு என்ன பொறுப்புகள், அதிகாரங்கள் என்பவை வரையறுக்கப்படாமல் அவர்கள் பொம்மை போல் காட்சியளிக்கிறார்கள். பொறுப்பு என்றால், தலைமையாசிரியருடைய பளுவைப் பகிர்ந்து கொள்ளுவதுதான். துணைத் தலைமை ஆசிரியர் பதவி அலங்காரப் பதவியல்ல. ஆகவே துணைத் தலைமை ஆசிரியர்களுக்கு இன்னின்ன பொறுப்புக்கள் கொடுக்கலாம் என்று கல்வி இலாக்கா தகுந்த ஆணையைப் பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதையும் அரசு பரிசீலிக்கும்.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகச் சொல்வதால், என்னுடைய கேள்வி எழுகின்றது. ஆயிரம் பேர்களுக்கு மேல் உள்ள பள்ளிகளில் ஒரு உதவித் தலைமையாசிரியர் என்றால், இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் உள்ள பள்ளியில் இரண்டு உதவித் தலைமையாசிரியர்களும், மூவாயிரம் பேர்களுக்கு மேல் உள்ள பள்ளியில் மூன்று உதவித் தலைமையாசிரியர்களும் நியமிக்கும் யோசனையையும் அதே நேரத்தில் தமிழ் ஆசிரியர்களை உதவித் தலைமையாசிரியர்களாக ஆக்குகிற யோசனையையும் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒரு உதவித் தலைமையாசிரியர் நியமிக்கின்ற குறிப்புதான் இருக்கிறது. ஆயிரம் மாணவர்களுக்கு ஒரு தலைமையாசிரியர் என்ற நிலைமை இப்போது இல்லை. தமிழ் ஆசிரியர்கள் பற்றி பிறகு பரிசீலிக்கப்படும்.

Thirukkural

* 35 *Q*.—THIRU A. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have any proposal to honour the scholars who have made a deep study of Thirukkural and are devoting their time to propagate the tenets of Thirukkural among the public; and

(*b*) if so, the number of scholars who have been so honoured?

திருக்குறள்

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்--

(அ) திருக்குறளில் தேர்ச்சி பெற்று அதன் பெருமையை நாட்டு மக்களிடத்தில் எடுத்துச் சொல்லி வரும் அறிஞர் பெருமக்களை, கௌரவிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை பேர் கௌரவிக்கப்பட்டுள்ளனர் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.